








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 4 5.02.2026

Scanned with OKEN Scanner




ஶ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே

## படித்து
## பின்பற்ற வேண்டிய முத்துக்கள்
## உபதேசங்கள்

1. லீலா விபூதியும், நித்ய விபூதியும் ஸர்வேஸ்வரனான கண்ணனின் விபூதிகளே ; ஆகையால், ஸர்வேஸ்வரனான கண்ணனின் ஆதிக்கத்தில் உள்ள இரண்டு விபூதிகளையும் (லீலா விபூதி மற்றும் நித்ய விபூதி), அதாவது அவன் நியமனத்திற்கு விஷயமாக உள்ள அனைத்தையும், எண்ணிக்கையோடு அளவிட்டு கூற இயலாது என்கிறான் கண்ணன்.

கண்ணன் விளக்கும் பகவத் கீதை அத்யாயம் 10 - ஸ்லோகம் 40

ந அந்த: அஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப ஏஷ து உத்தேஸத: ப்ரோக்த: விபூதே: விஸ்தர: மயா

பார்த்தா, என் சுபமான செல்வங்களுக்கு முடிவில்லை ; என் சொத்துக்களின் இந்த விரிவும் கூட முக்கியமானவற்றை எடுத்துக் காட்டும் வகையில், என்னால் கூறப்பட்டது.

*******************************************************************

#ப்ரக்ருதி லோகத்தில் பல அண்டங்கள் உள்ளன. ஒவ்வொரு அண்டத்திலும் 14 லோகங்கள் இருக்கின்றன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த உலகத்தை சேர்த்து, மேல் லோகங்கள் ஏழு (பூலோகம், புவர் லோகம், ஸ்வர்க லோகம், மக லோகம், ஜன லோகம், தப லோகம் மற்றும் சத்ய லோகம்); கீழ் லோகங்கள் ஏழு ( அதல லோகம், விதல லோகம், சுதல லோகம், தலாதல லோகம், மகாதல லோகம். ரசாதல லோகம் மற்றும் பாதாள லோகம்).

# ஒவ்வொரு அண்டத்திலும், 14 லோகங்களும், ப்ரஜாபதியும் (சதுர்முக ப்ருஹ்மா), பசுபதியும் (ருத்ரன்) மற்றும் இதர தேவர்களுகளும் உள்ளனர் ; ஒவ்வொரு அண்டத்தின் ப்ரளயத்தை, சாஸ்த்ரங்கள் மூன்று வித மாக பிரித்து கூறுகின்றன.

'நித்ய ப்ரளயம்', 'நைமித்திக ப்ரளயம்' மற்றும் 'ப்ராக்ருத ப்ரளயம்' (மஹா ப்ரளயம்)

Scanned with OKEN Scanner

**************************************************************************

இந்த ப்ரபஞ்சத்தில் பல அண்டங்கள் உள்ளன; அனைத்து அண்டங்களில் இருக்கிற 14 லோகங்களும் ப்ரளயத்தில் அழியகூடியவையே என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

அன்றாடம் ஏற்படும் பிறப்பினால் ஏற்படும் இறப்பு 'நித்ய ப்ரளயமாகும்*

ப்ருஹ்மாவின் ஒவ்வொரு இரவு காலத்திலும் 'நைமித்திக ப்ரளயம்* ஏற்படும்; இந்த ப்ரளயத்தில் நான்கு லோகங்கள் (பூலோகம், புவர் லோகம், ஸ்வர்க லோகம் மற்றும் பாதாள லோகம்) கடும் மழையினால் சூழப்பட்டு, அழிந்து விடும் ; அதாவது, நீர் சூழ்ந்து நான்கு லோகங்கள் அழிந்து போகின்றன ; இந்த ப்ரளயத்தின் போது அசித் தத்வங்கள், ப்ரளயம் அற்ற லோகங்களில் நாம ரூபங்களோடு இருந்து போகும். மீண்டும் அழிந்த லோகங்களில் உற்பத்தி தொடங்கும்.

ப்ருஹ்மாவின் ஆயுட்காலம் முடியும் போது, 14 லோகங்களும் கடும் மழையினால் சூழப்பட்டு, அழிந்து விடும். இது 'ப்ராக்ருத ப்ரளயம்' (மஹா ப்ரளயம்)

**************************************************************************

2. தைத்ரீய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது ------

யதோவா இமானி பூதானி ஜாயந்தே
யேன ஜாதானி ஜீவநதி
யத் பிரயந்த்ய பி சம்விசந்தி
தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி" I

அதாவது, எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன். பரமாத்மா).

மஹோபநிஷத்தில்,

'ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஸாந நேமே ஜாவா ப்ருத்வி நக்ஷத்ராணி*

என்கிறது. அதாவது, நாராயணன் ஒருவனே,மஹா ப்ரளய காலத்தில் இருந்தான்; சதுர்முக ப்ருஹ்மாவும் இல்லை; சிவனுமில்லை; லோகங்கள் இல்லை; நக்ஷத்திரங்கள் இல்லை என்று மஹாப்ரளய காலத்தில் பல இல்லாத வஸ்துக்களையும் உபநிஷத் கூறுவதினால், மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா), என்பதாகிறது.

*******************"**********************************************

Scanned with OKEN Scanner

3. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், ஸகல விதமான பந்துவாகிறான், என்பது ப்ரமாண ஸித்தம் அதாவது, பரமாத்மாவான பகவானுக்கும் ஜீவர்களுக்கும் நவ வித சம்பந்தங்கள் உண்டு என்பதை ப்ரமாண பலத்தினால் தெளியலாம்; இந்த சம்பந்தங்கள் உபமானம் காட்டி விளக்கப் படுகிறது.

'பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி, ஸ்வாமி ஆதாரோ மம அத்மா ச போக்தா சாத்யமநுதித:'

# 'பிதா-புத்ரன்" - பகவானே ஸர்வ காரணபூதன் - கஜேந்திரன், முதலையின் பிடியிலிருந்து தப்பிக்க, 'நமோஸ்துதே அகில காரணாய; நிஷ்காரணாய; அத்புத காரணாய' எனக்கூறி, எம்பெருமானை அழைத்தான்.

# "ரக்ஷகன்-ரக்ஷிய வஸ்துக்கள்*- பகவானே ஸர்வ ரக்ஷகன் - ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் "மூல மந்த்ராதிகாரத்தில்* உள்ள வரிகள் தெளிவிக்கின்றன: 'இந்த ரக்ஷகத்வம் (அவ ரக்ஷணே) அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும்*

# "சேஷி சேஷ பாவம்* - பகவானே ஸர்வ சேஷி வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ ராமானுஜர், 'பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி' என்று 'சேஷ - சேஷி' விஷயத்தை விளக்கி அருளியுள்ளார். பகவானுக்கு போக ரஸத்தையும் லீலா ரஸத்தையும் உண்டாக்கும் ஜீவர்கள் சேஷ பூதர்கள் : அவன் சேஷி.

# "கணவன்-மனைவி உபமானம்" - பகவானே ஸர்வ நியந்தா - ஸ்ரீ ராம தூதனாக வந்த சிறிய திருவடியிடம்,பிராட்டி கூறியதாவது, கௌசல்யா லோக பர்தாரம் ஸுஷுவே யம் மனஸ்வினி தம் மமார்த்தம் ஸுகம் ப்ருச்ச சிரஸா ச அபிவாதயா* கோசலை நந்தனான லோக பர்தாவான ஸ்ரீராமனிடம் என்னுடைய நமஸ்காரங்களைத் தெரிவி.

# *அறிய வேண்டுபவன் - அறிபவன் பற்றிய விளக்கம்* - 'அதாதோ ப்ருஹ்ம ஜிக்ஞாஸா" என்கிற ப்ருஹ்ம ஸூத்ரமானது கர்ம விசாரானந்தரம் ப்ருஹ்மத்தைக் குறித்த ஆய்வு சரியானதே; அவனே அறிய வேண்டுபவன், என்றாகிறது.

# "ஸ்வாமி- தாஸ பாவம்" - பகவானே ஸர்வ ஸ்வாமி - கடோபநிஷத் கூறும் போது, 'மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்" என்று திவ்ய தம்பதிகளுக்கு *ம* என்பதால் சொல்லப்படுகிற ஜீவன்

Scanned with OKEN Scanner

தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கம், எனப் பொருளாகிறது.

# "ஆதார-ஆதேய விளக்கம்* - பகவானே ஸர்வ ஆதாரன் - நாராயணன், தத் புருஷ சமாஸத்தினால் நாராணாம் அயனம்"-அதாவது ஸகல சேதன அசேதன வஸ்துக்களும் இருப்பிடமாகக் கொண்டவன்; ஆக, நாராயண் 'ஆதாரம்' ; மற்றவை 'ஆதேயம்'

# *சரீரி சரீர சம்பந்தம்* - பகவானே பரமாத்மா - தைத்ரிய உபநிஷத்தில், 'நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:' என்றும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், 'யஸ்ய ஆத்மா சரீரம்* - ஜீவர்களை நாராயணனுக்கு சரீரம் என்றும் சொல்லப்படுகிறது.

# 'போக்தா-போக்ய விளக்கம்' - பகவானே ஸர்வ போக்தா உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரம் 'லோகவத்து லீலா கைவல்யம்' என்கிறது.

************************************************************************

**புத்தியின் குணங்கள் 7**

1. புது விஷயங்களை அறிவதற்கு ஆவல்
2. புது விஷயங்களைக் கேட்பது
3. புது விஷயங்களை மனதில் வாங்கிக் கொள்ளல்
4. இவற்றைத் தரிப்பது (மனத்தில் நிலைநிறுத்தல்)
5. பொருள்களின் கூறுபாட்டை அறிதல்
6. பொருள்களின் உண்மையைப் பற்றுதல்
7. தத்வத்தைத் தீர்மானமாக அறிதல்

**முமுக்ஷுக்கான 7 குணங்கள்** (முமுக்ஷு- மோக்ஷத்தை நாடுவோர்)

1. எல்லாப் பிராணிகளிடமும், தயை, பொறுமை
2. குணவான்களிடம் த்வேஷமில்லாமை
3. மனோ-வாக்-காயங்களில், ஸுத்தி
4. ஆத்மாவை அதிகமாகப் பீடிக்காமையும், நல்ல கார்யங்களையே செய்வதும்
5. ஆபத்தான நிலையிலும் மனம் குன்றாது இருப்பது
6. தானம் செய்வதில் ருசி
7. சிற்றின்பத்திலும், பிறருடைய த்ரவயங்களிலும் பற்றில்லாமை

Scanned with OKEN Scanner